# திருப்பத்தூர் நகராட்சி

2020 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 - ம் நாள் திங்கட்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம் தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் திருப்பத்தூர் நகராட்சி.
நாள். 09.03.2020

**பொருட்கள்**

**19) தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு மறுவரையறை ஒழுங்குமுறை விதிகள் 2017**-ன்படி 2011ம் ஆண்டு மக்கள் தொகை மற்றும் 31.03.2016-ம் ஆண்டின் குடியிருப்புகள் எண்ணிக்கை அடிப்படையிலும், வார்டு மறுவரையறை ஆணையத்தின் வழிகாட்டுதலின்படியும் திருப்பத்தூர் நகராட்சியின் 36 வார்டுகளுக்கான வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டு உரிய வழிமுறையாக மாநில வார்டு மறுவரையறை ஆணையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இப்பொருள் சார்ந்த வழிமுறைகள் பின்பற்றப்பட்டு, இறுதி வார்டு மறுவரையறைக்கான அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு இதற்கான அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழ் எண்.407**, நாள்: 14.12.2018-ல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்பின்பு புதியதாக 9 மாவட்டங்கள் உருவாக்கி தமிழக அரசு ஆணை பிறப்பித்து நடைமுறைப்படுத்தியதை தொடர்ந்து இந்த மாவட்டங்களில் அமைந்துள்ள உள்ளாட்சிகளுக்கு மேற்குறிப்பிட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி 2011-ம் வருட மக்கள் தொகை மற்றும் 31.03.2019-ம் தேதி வரையிலான குடியிருப்புகள் அடிப்படையாக கொண்டு மீள வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்து, வரைவு பட்டியலில் வெளியிட வார்டு மறுவரையறை ஆணையம், நகராட்சி நிர்வாக ஆணையரகம் மற்றும் மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் வழங்கிய வழிகாட்டுதலின்படி 31.03.2019-ம் தேதி வரையிலான குடியிருப்புகளை சேர்த்து வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயார் செய்யப்பட்டு 18.02.2020-ம் தேதியன்று பொதுமக்களின் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் தெரிவிக்க கோரி வரைவு வார்டு மறுவரையறை பட்டியல் முறைப்படி வெளியிடப்பட்டது.

இதன்மீது உள்ளாட்சி அளவில் 18.02.2020 முதல் 22.02.2020 வரை பெறப்பட்ட மனுக்கள், 25.02.2020-ம் தேதியன்று திருப்பத்தூர் மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைப்பெற்ற கருத்து கேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் 07.03.2020-ம் தேதியன்று திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாநில வார்டு மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்பட்ட கருத்து கேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் குறித்து சம்மந்தப்பட்ட மனுதாரர்களுடன் கலந்து பேசியும், உரிய கள ஆய்வு மேற்கொண்டும், இம்மனுக்கள் மீது எடுக்கப்பட்ட முடிவுகளின்படிக்கு இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு தயாரிக்கப்பட்டு உரிய வழிமுறையாக மாவட்ட ஆட்சியர் மற்றும்

நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் மாநில வார்டு மறுவரையறை ஆணைய ஒப்புதலுக்கு சமர்பிக்கப்பட உள்ளது.

மேற்படி இறுதி வரைவு வார்டு மறுவரையறை கருத்துரு குறித்து மன்றத்தின் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(ந.க.எண்.3253/2017/எப்1)**

# <u>திருப்பத்தூர் நகராட்சி</u>

2020 - ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 - ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் இயல்புக் கூட்ட நடவடிக்கைகள்

நகராட்சி அலுவலகம்
திருப்பத்தூர்
நாள். 20.03.2020

தனி அலுவலர் (ம) ஆணையாளர்,
திருப்பத்தூர் நகராட்சி.

**பொருட்கள்**

**20)** மத்திய மாநில பேரிடர் மேலாண்மை திட்டத்தின் கீழ் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர், திருப்பத்தூர் மாவட்டம், அவர்களின் ஆய்வுக்கூட்டம் நாள்.**08.03.2020** மற்றும் **16.03.2020** ஆகிய தேதிகளில் நடைபெற்ற கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டதன்படி, திருப்பத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளில் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடஙகள், அரசு கட்டிடஙகள், நகராட்சி நகர்புற நல மருத்துவ மையம் மற்றும் பஸ் நிலையம் ஆகிய பகுதிகளில் பொதுமக்கள் தினசரி வருகை புரிவதால் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு மற்றும் பொதுசுகாதாரப் பணிகளுக்கு வேண்டிய கிருமிநாசினி மற்றும் பாதுகாப்பு உபகரணஙகள் ஆகியவற்றினை கொள்முதல் செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான தோராயச் செலவின தொகை ரூ.**25,00,000/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொதுசுகாதாரப் பணியான கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தினை பொது நிதியில் வழஙகவும் பின்னர் அரசு ஏதேனும் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் அதனை ஈடு செய்து கொள்ள மன்றம் அஙகீகரிக்கலாம்.

**(ந.க.எண்.298/2020/எச்1)**

21) கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்காக இவ்வலுவலக விலைப்புள்ளி கோரும் அறிவிப்பு ந.க.எண்.298/2020/எச்1 நாள்.17.03.2020–ன்படி கீழ்காணும் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொருட்களின் விவரம் | அளவு | திருப்பத்தூர் அக்ரோ பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையம் திருப்பத்தூர் ரூ. | சுதர்சன் பயோகெம் காந்தி ரோடு திருப்பத்தூர் ரூ. | ரெயின்போ எண்டர் பிரைசஸ் பாரதி நகர் ஜமீன் பல்லாவரம் சென்னை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | துணி முகக்கவசம் உறை | 1 No | ரூ.10 + வரி | 12.00 | 12.50 |
| 2 | கை உறை (ஒரு முறை பயன்பாடு) | 1 No | ரூ. 7 + வரி | 8.00 | 9.50 |
| 3 | கை உறை (பதபடுத்தியது) | 1 No | ரூ.9 + வரி | 10.00 | 10.50 |
| 4 | பவர் இயந்திர தெளிப்பான் (20லி) | 1 No | ரூ.9800 + வரி | 10000 | 11000 |
| 5 | லைசால் | 1 லி | ரூ.155 + வரி | 160.00 | 170.00 |
| 6 | சோப் ஆயில் | 1 லி | ரூ.210 + வரி | 220.00 | 222.00 |
| 7 | பினாயில் | 1 லி | ரூ. 80 + வரி | 85.00 | 90.00 |
| 8 | கை உறை | 1 செட் | ரூ.210 + வரி | 220. 00 | 225.00 |
| 9 | 3 அடுக்கு முக கவசம் | 1 No | ரூ.18 + வரி | 20.00 | 20.00 |
| 10 | சோடியம் ஹைப்போ குளோரைட் | 1 லி | ரூ.36+ வரி | 38.00 | 40.00 |
| 11 | தொப்பி | 1 No | ரூ.110 + வரி | 120.00 | 125.00 |
| 12 | ஒளிரும் மேல் சட்டை | 1 No | ரூ.380 + வரி | 390.00 | 390.00 |
| 13 | கம் பூட் | 1 செட் | ரூ.950 + வரி | 980.00 | 980.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14 | பிளீச்சிங் பவுடர் | 1 கி | ரூ.46 + வரி | 48.00 | 49.00 |
| 15 | சாணிடைசர் திரவம் | 1 லி | ரூ.780 + வரி | 800.00 | 790.00 |
| 16 | சுண்ணாம்பு தூள் | 1 கி | ரூ.11.30 + வரி | 12.00 | 12.50 |
| 17 | P.P.E.KIT (SSMMS) | 1 செட் | ரூ.1100+வரி | 1150.00 | 1250 |
| 18 | P.P.E. KIT (சாதாரணம்) | 1 செட் | ரூ.470 + வரி | 500.00 | 550.00 |

மேற்காணும் இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள அரசு நிறுவனமான திருப்பத்தூர் அக்ரோ பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவு மையம் லிமிடெட், ஆசிரியர் நகர், திருப்பத்தூர் நிறுவனத்திலிருந்து அவ்வப்போது தேவையான அளவிற்கு பொருட்கள் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :-**</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குறைந்த விலைப்புள்ளிதாரருக்கு வேலை உத்திரவு வழங்க அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தை மாநில பேரிடர் பொறுப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ந.க.எண்.298/ 2020 / எச்1.

22) திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண் 1 முதல் 36 முடிய நிறுவப்பட்டுள்ள அனைத்து தெருவிளக்குகளுக்கும் கடந்த 1.01.2020 முதல் 31.03.2020 வரை மூன்று மாத காலத்திற்கு தனியார் மூலம் இயக்கி பராமரிப்பதற்கு அனுமதித்து நகர மன்ற தீர்மானம் எண் 133 நாள் 23.12.20219 –ன் படி மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு மேற்படி பணியினை செய்தவதற்கு சன்ஜெய் டிரேடர்ஸ், தருமபுரி, என்ற தனியார் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு ஒப்பந்த காலம் 31.03.2020–ம் தேதியுடன் முடிகின்றது.

மேலும் நகராட்சி நிர்வாக காரணங்களை முன்னிட்டும் பொதுப்பணித்துறையின் தரப்படுத்தப்பட்ட செந்தர விலை விகித அட்டவணை (PWD SCHEDULE OF RATE) 2019–2020 –க்குரிய விலை விகிதம் அதன் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்வதற்கும் கூடுதல் கால அவகாசம் கருதியும், இப்பணிக்கு கூடுதலாக 01.04.2020 முதல் 30.06.2020 வரை மூன்று மாத காலத்திற்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் செய்வதற்கு (பழைய மதிப்பீடு விலை விகிதத்திலேயே) உண்டான செலவீனம் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதியும் மற்றும் சன்ஜெய் டிரேடர்ஸ் தருமபுரி அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இப்பணிக்கு பணி உத்தரவு வழங்கவும் இப்பணிக்கான செலவீனத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1342/2016/இ1

**23)** திருப்பத்தூர் நகராட்சியில் 14th CFC மத்திய நிதிக் குழுமம் மானிய திட்டம் 2019–2020–ம் நிதியாண்டின் கீழ் தொகை ரூ.235.00 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினமலர் செய்தி தாளில் விளம்பரம் செய்யப்பட்டது. (தேதி 09.01.2020) விளம்பரம் செய்யப்பட்டதில் விளம்பர கட்டண தொகை ரூ.8,408/–ஐ Bright Advertising அவர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதி 2019–2020–ல் ஈடு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2414/2019/இ1)